செய்தி வெளியீடு எண்: 353 நாள்: 20.06.2019

**செய்தி வெளியீடு**

## அளவு குறைவாக விநியோகம் செய்த பெட்ரோல் பங்குகளில் தொழிலாளர் துறை தீவிர நடவடிக்கை

தமிழ்நாட்டில் இயங்கி வரும் பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் வாடிக்கையாளர்களுக்கு சரியான அளவில் பெட்ரோல் / டீசல் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் தொழிலாளர் துறை அமுலாக்க அதிகாரிகளால் முறையாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது, மேலும் புகார் பெறப்படும் நேர்வில் சிறப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வகையில் தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்த கோபால் , இ.ஆ.ப., அவர்கள் அறிவுரையின் பேரில் ஜுன் 2019ம் மாதத்தில் 19ம் தேதியன்று தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர்கள் (செயலாக்கம்) தலைமையில் பெட்ரோல் / டீசல் நிறுவனங்களில் அளவு குறைவாக விநியோகம் செய்வதனை ஆய்வு செய்தும் பயன்பாட்டிலுள்ள Dispensing Unit ல் Mother Board பகுதியில் Electronic Chip ஏதும் பொருத்தி அளவு குறைவாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்து சிறப்பாய்வுகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது.

மேற்கண்ட ஆய்வின் போது, 256 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 63 நிறுவனங்களில் அளவு குறைவாக விநியோகம் செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. அந்த பம்புகளில் விற்பனை செய்வதனை தடைசெய்து சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இந்நிறுவனங்களில் Dispensing Unit ல் Mother Board பகுதியில் Electronic Chip ஏதும் பொருத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

நுகர்வோர்கள் பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் எரிபொருள் நிரப்பும் போது பெட்ரோலிய எரிபொருள்கள் நிரப்பும் அளவு காட்டி, பெட்ரோல் நிரப்புவதற்கு முன்பு பூஜ்ஜியத்தில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் பெட்ரோல் / டீசல் விநியோகிக்கும் எந்திரங்களில் விநியோகிக்கப்படும் அளவினை சரிபார்க்க மேற்படி விற்பனை நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வரும் 5 லிட்டர் கொள்ளளவு உள்ள முத்திரையிடப்பட்ட கூம்பிய அளவினை பயன்படுத்தி விநியோகிக்கப்படும் அளவினை சரிபார்த்துக் கொள்ளலாம்.

மேற்காணும் பொது மக்கள் அளவு குறைவாக விநியோகிக்கும் பெட்ரோல் / டீசல் நிறுவனங்கள் குறித்த புகார்களை தெரிவிக்க தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS ( Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைபேசி செயலியை Google Playstore மூலம் பதிவிறக்கம் செய்து அதன் வாயிலாக நுகர்வோர்கள் / பொதுமக்கள் புகார் அளித்து உரிய நிவாரணம் காணலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9